Australian Government
Department of Immigration and Border Protection

# அவுஸ்திரேலியாவில் வாழ்க்கை

## அவுஸ்திரேலிய விழுமியங்கள் மற்றும் ஒழுக்க நெறிகள்

பதிப்புரிமை

© அவுஸ்திரேலியப் பொதுநல அரசு 2016

அரசாங்கச் சின்னத்தைத் தவிர, இந்தப் பிரசுரத்தில் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் ‘கிரியேட்டிவ் காமன்ஸ் அட்ரிபியூஷன் 3.0 அவுஸ்திரேலியா’ உரிமத்தின் (கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம்) கீழ் வழங்கப்படுகின்றது.

இந்த வெளியீட்டிற்கான மூலத்தினை ( அல்லது இந்த வெளியீட்டிலிருந்து நீங்கள் பயன்படுத்தும் பகுதிகளுக்கான மூலத்தினை பின் வரும் வார்த்தைகளைப் பயன்படுத்தி நீங்கள் அறிவிக்க வேண்டும் என்பது  அவுஸ்திரேலியப் பொதுநல அரசின் விருப்பமாகும். மூலம்: ‘கிரியேட்டிவ் காமன்ஸ் அட்ரிபியூஷன் *3.0* அவுஸ்திரேலியா’ உரிமத்தின் கீழ் அவுஸ்திரேலிய பொதுநல அரசிடமிருந்து உரிமம் பெறப்பட்டது. அவுஸ்திரேலிய பொதுநல அரசு இந்த வெளியீட்டின் உள்ளடக்கங்களை முன்னெடுத்து வைத்து அவற்றிற்கு ஆத ரவளிக்கிறது என்ற அர்த்தம் எதுவுமில்லை.

எந்த விதிகளின் அடிப்படையில்  அவுஸ்திரேலிய அரசினது சின்னத்தினைப் பயன்படுத்த முடியும் என்பது அதன் பெருமிதம் குறித்த இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ளது.

ISBN 978 1 920996 53 6

இந்த வெளியீடு www.border.gov.au என்ற வலைத்தள வாயிலாகவும் கிடைக்கிறது

‘மொழிபெயர்த்துரைப்பாளர் குறியீடு’ என்பது அவுஸ்திரேலிய பொதுநல அரசு, மாநில மற்றும் எல்லைப்பகுதி அரசாங்கங்களுடன் இணைவாகப் பன்முகக் கலாச்சார விவகார விக்டோரியன் அலுவலக’த்தால் உருவாக்கப்பட்ட தேசிய பொதுத் தகவல் அடையாளக் குறியாகும்.. இந்தக் குறியீடு ஆங்கில மொழியறிவு குறைவாக உள்ளவர்கள் அரசாங்கச் சேவைகளைப் பயன்படுத்தும்போது மொழி சார்ந்த உதவியை எங்கு கேட்க முடியும் என்பதைக் குறிப்பிடுகின்ற ஒரு எளிமையான வழியாக உள்ளது .

நீங்கள் இந்தக் குறியீடுகளை பொது வைத்தியசாலைகள், காவல் நிலையங்கள், மாநிலப் பாடசாலைகள், சமுதாய மையங்கள், வீடுகள் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள், உள்ளூர் மன்றங்கள் மற்றும் குடியேற்ற வள மையங்கள் என்பன போன்ற அரசாங்க மற்றும் சமுதாயம் சார்ந்த தகவல்களையும் சேவைகளையும் வழங்குகின்ற இடங்களில் பார்க்கலாம்.

இந்த ‘மொழிபெயர்ப்பாளர் குறியீடு’ விக்டோரிய மாநிலத்தில் மே 2006-இல் அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

## உள்ளடக்கங்கள்

பின்னணித் தகவல் ........ 4

அவுஸ்திரேலிய விழுமிய வாக்குமூலம் ........ 4

தற்காலிக மற்றும் நிரந்தர விசா விண்ணப்பதாரர்களுக்கான அவுஸ்திரேலிய அவுஸ்திரேலிய விழுமிய வாக்குமூலம் ........ 5

தற்காலிக விசா விண்ணப்பதாரர்களுக்கான ........ 6

அவுஸ்திரேலிய விழுமியங் மற்றும் ஒழுக்க நெறிகள் ........ 7

அடிப்படைச் சுதந்திரங்கள் ........ 7

தனி நபர் சமத்துவம், கண்ணியம் மற்றும் சுதந்திரத்திற்கு மதிப்பளித்தல் ........ 7

பேச்சு சுதந்திரம் ........ 8

மதம் மற்றும் மதச்சார்பற்ற அரசுக்கான சுதந்திரம் ........ 8

ஒன்று கூட சுதந்திரம் ........ 8

நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் சட்ட மேன்மைக்கான ஆதரவு ........ 9

சட்டத்தின் கீழான சமத்துவம் ........ 9

ஆடவர் - மகளிர் சமத்துவம் ........ 9

சம வாய்ப்பு மற்றும் சமத்துவ உணர்வு ........ 9

அமைதி ........ 10

பகிரப்படும் விழுமியங்கள் ........ 10

இன்றைய அவுஸ்திரேலிய சமுதாயம் ........ 11

சட்டங்கள் மற்றும் சமூகப் பழக்கவழக்கங்கள் ........ 11

குணவியல்புத் தேவைகள் ........ 12

அவுஸ்திரேலியப் பணியிட உரிமைகள் ........ 12

மேலதிகத் தகவல்கள் ........ 13

# பின்னணித் தகவல்

இந்தத் தகவல் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ அவுஸ்திரேலியாவில் வசிப்பதற்கு விண்ணப்பிப்பவர்களுக்காக வெளியிடப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியா, அதன் வரலாறு, வாழ்க்கை முறை மற்றும் நாம் பகிர்ந்துகொள்ளும் விழுமியங்கள் ஆகியவற்றைப் பற்றிய சுருக்கமான மேலோட்டம் ஒன்றை வழங்குகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட விசாக்களுக்காக விண்ணப்பிக்கும்போது, 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் தாங்கள் அவுஸ்திரேலியாவின் விழுமியங்களுக்கு மரியாதையளிப்பதையும், அவுஸ்திரேலியாவின் சட்டங்களைக் கடைப்பிடிப்பதையும் உறுதி செய்யும் விதமாக அவுஸ்திரேலிய விழுமிய வாக்குமூலம் ஒன்றில் கையொப்பமிட வேண்டும்.

அவுஸ்திரேலிய விழுமியங்ங்களில் பின்வருபவை உள்ளடங்கும்:

- சமத்துவம் மற்றும் தனி நபர் கண்ணியம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றினை மதித்தல்
- பேச்சு சுதந்திரம்
- மதம் மற்றும் மதச்சார்பற்ற அரசுக்கான சுதந்திரம்
- ஒன்று கூடல் சுதந்திரம்
- நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் சட்ட மேன்மைக்கான ஆதரவு
- சட்டத்தின் கீழான சமத்துவம்
- ஆடவர் - மகளிர் சமத்துவம்
- சம வாய்ப்புகள்
- அமைதி
- சகிப்புத்தன்மை, பரஸ்பர மரியாதை மற்றும் கருணை ஆகியவற்றை தேவையில் இருப்போருக்கு வழங்கும் சமத்துவ உணர்வு.

இந்த விழுமியங்களது அர்த்தம் ஒன்றுதான் என்றாலும் பல்வேறு நபர்களால் பல்வேறு வழிகளில் இவை வெளிப்படுத்தப்படலாம். இவை அவுஸ்திரேலியாவுக்கு மட்டுமே பிரத்யேகமானவை அல்ல, ஆனாலும் இவை பரந்துபட்ட சமுதாயத்தினரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, மற்றும் அவுஸ்திரேலிய சமூகம் மற்றும் கலாச்சாரத்தினது ஒரு அடிப்படையாக. இவை அமைந்துள்ளன.

இந்த விழுமிய வாக்குமூலமானது பெரும்பாலான விசா விண்ணப்பப் படிவங்களில் ஒரு கேள்வியாகவோ அல்லது உறுதிமொழியின் ஒரு பகுதியாகவோ இடம்பெறச் செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவத்தில் உள்ள விழுமிய வாக்குமூலக் கேள்வியில் கையொப்பமிடுவதற்கு முன்னர், தற்காலிக, நிரந்தர மற்றும் சிறிய எண்ணிக்கையிலான தற்காலிக விசாக்களுக்கான விண்ணப்பதாரிகள் அனைவரும் அவுஸ்திரேலிய அரசினால் முன் வைக்கப்பட்டுள்ள இந்த விழுமியங்களைப் பற்றிய தகவல்களை வாசித்திருக்க வேண்டும், அல்லது இத் தகவல்கள் அல்லது அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டிருக்க வேண்டும். கீழே உள்ள தகவல்கள் விசா விண்ணப்பதாரர்கள் தங்களுடைய விசா விண்ணப்பத்தில் உள்ள விழுமிய வாக்குமூலத்தில் கையொப்பமிடுவதற்கு முன்னதாக அவுஸ்திரேலிய விழுமியங்களைப் புரிந்துகொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

# அவுஸ்திரேலிய விழுமிய வாக்குமூலம்

அவுஸ்திரேலியாவில் வாழ்க்கைமுறை குறித்து அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள விவரங்களைத் தற்காலிக, நிரந்தர மற்றும் சிறிய எண்ணிக்கையிலான தற்காலிக விசாக்களுக்கான விண்ணப்பதாரர்கள் வாசித்திருக்க வேண்டும் அல்லது அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் பின்னர் அவுஸ்திரேலிய குடியுரிமைக்காக விண்ணப்பித்தால் அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படும் என்பதைப் புரிந்துகொள்ளுமாறும் அவர்களிடம்

கேட்கப்படும். பயன்பாட்டில் உள்ள விசா விண்ணப்பப் படிவங்களில் இந்த வாக்குமூலம் சேர்க்கப்பட்டுள்ளது, மற்றும் 18 அல்லது அதற்கும் மேற்பட்ட வயதுடைய விண்ணப்பதாரர்கள் அனைவரும் இந்த அறிக்கையில் கையொப்பமிட வேண்டும்.

## தற்காலிக மற்றும் நிரந்தர விசா விண்ணப்பதாரர்களுக்கான அவுஸ்திரேலிய விழுமிய வாக்குமூலம்

நீங்கள் 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருந்தால் இந்த வாக்குமூலத்தில் நீங்கள் கட்டாயமாக கையொப்பமிட வேண்டும்.

*அவுஸ்திரேலிய சமூகம் மற்றும் விழுமியங்கள் குறித்து அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களை நான் வாசித்திருக்கிறேன், அல்லது அவை எனக்கு விளக்கிக் கூறப்பட்டன என நான் உறுதியளிக்கிறேன்.*

*பின் வருவனவற்றை நான் அறிகிறேன்:*

- *தனிநபரின் சுதந்திரம் மற்றும் கண்ணியம், மத சுதந்திரம், சட்டத்தின் மேன்மை குறித்த பற்றுறுதி, நாடாளுமன்ற ஜனநாயகம், ஆடவர் மகளிர் சமத்துவம், மற்றும் பரஸ்பர மரியாதை, சகிப்புத்தன்மை நியாயப் போக்கு மற்றும் தேவையில் இருப்போருக்குக் கருணை மற்றும் பொது நலன்களைப் பேணும் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கும் சமத்துவம் ஆகியவற்றிற்கான மரியாதைக்கு அவுஸ்திரேலிய சமூகம் பெரும் மதிப்பளிக்கிறது*
- *அவுஸ்திரேலிய அரசாங்கம் தனிநபர்களின் சாதி, மதம் மற்றும் இனப் பின்னணியைக் கருத்தில் கொள்ளாது அவர்களின் சம வாய்ப்புகளுக்கு மதிப்பளிக்கிறது*
- *தேசிய மொழியாகிய ஆங்கில மொழி அவுஸ்திரேலிய சமூகத்தை ஒருங்கிணைக்கின்ற ஒரு முக்கியக் கருவியாகத் திகழ்கிறது.*

அவுஸ்திரேலியாவில் நான் தங்கியிருக்கும் காலத்தில் அவுஸ்திரேலிய சமூகத்தின் இந்த விழுமியங்களுக்கு மரியாதையளிப்பேன் எனவும், அவுஸ்திரேலியச் சட்டங்களைக் கடைப்பிடிப்பேன் எனவும் நான் உறுதியளிக்கிறேன்.

*ஒரு அவுஸ்திரேலியக் குடிமகனாவதற்கு விண்ணப்பித்தால், பின் வரும் விடயங்களை நான் விளங்கிக்கொண்டிருக்க வேண்டும் என்பதை அறிகிறேன்:*

- *அவுஸ்திரேலியக் குடியுரிமை என்பது, பன்முகத்தன்மைக்கு மதிப்பளிக்கும் அதே சமயம் அனைத்து அவுஸ்திரேலியர்களையும் ஒருங்கிணைக்கின்ற பகிரப்பட்டதொரு அடையாளமும், ஒரு பொதுவான பிணைப்பும் ஆகும்.*
- *அவுஸ்திரேலியக் குடியுரிமை என்பது பரஸ்பர உரிமைகள் மற்றும் பொறுப்புகளை உள்ளடக்கியதாக உள்ளது. அவுஸ்திரேலியக் குடியுரிமையின் பொறுப்புகள் என்பவை, தேர்தல்களில் வாக்களிப்பது மற்றும் சட்டக்குழுவில் சேவை செய்வது ஆகியவை தொடர்பானது உட்பட, அவுஸ்திரேலியச் சட்டங்களைக் கடைப்பிடிப்பதை உள்ளடக்கியதாகும்.*

*ஒரு அவுஸ்திரேலியக் குடிமகனாவதற்கான எனது சட்டப்படியான தகுதிகளை நான் பூர்த்தி செய்து எனது விண்ணப்பம் ஏற்கப்பட்டுவிட்டால், நான் அவுஸ்திரேலியாவிற்கும் அதன் குடிமக்களுக்கும் விசுவாசமாக இருப்பேன் என உறுதியளிக்க வேண்டும் என்பதை நான் அறிகிறேன்.*

இணையதள விண்ணப்பங்களுக்கு, முதன்மை விசா விண்ணப்பதாரர் விழுமிய வாக்குமூலத்திற்கு ‘ஆம்’ அல்லது ‘இல்லை’ என்பதைக் குறிப்பிடுகின்ற ஒரு பொத்தானைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவார். 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய சார்ந்திருப்போர் விண்ணப்பத்தில் இடம் பெற்றிருந்தால், வாக்குமூலத்தில்ல் கூடுதல் பத்தி ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது:

*இந்த விண்ணப்பத்தில் இடம் பெற்றுள்ள 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய இதர நபர்கள் அனைவரும், அவுஸ்திரேலிய சமூகம் மற்றும் விழுமியங்கள் குறித்து அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களை வாசித்துப் பார்த்ததாக, அல்லது அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளதாகவும், மேலே குறிப்பிட்டுள்ள வாக்குமூலத்திற்கு ஒப்புதல் அளிப்பதாகவும் என்னிடம் தெரிவித்துள்ளனர்.*

இந்தச் சூழ்நிலைகளில் விண்ணப்பதாரர் தனது சார்பாகவும், தன்னைச் சார்ந்திருப்பவர் சார்பாகவும் இந்த வாக்குமூலத்தினை ஏற்படுத்துகிறார்.

# தற்காலிக விசா விண்ணப்பதாரர்களுக்கான அவுஸ்திரேலிய விழுமிய வாக்குமூலம்

பாதிக்கப்பட்ட தற்காலிக விசாக்களுக்கான விண்ணப்பதாரர்களும் அவுஸ்திரேலிய விழுமிய வாக்குமூலத்தில் கையொப்பமிட வேண்டும். அவர்களுடைய வாக்குமூலமானது விண்ணப்பத்தின் பொது உறுதிமொழிப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது, எனவே விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிடுவதால் விழுமிய வாக்குமூலமும் கையொப்பமிடப்பட்டுள்ளதாக எடுத்துக்கொள்ளப்படும். இந்த விண்ணப்பதாரர்களுக்கு இத்தகவலை வாசித்துக் காண்பிக்க வேண்டியதில்லை, ஆனால் அவர்கள் விரும்பினால் அவ்வாறு செய்யலாம்.

பெரும்பாலான தற்காலிக விசா விண்ணப்பப் படிவங்களில் பின்வரும் அவுஸ்திரேலிய விழுமிய வாக்குமூலம் சேர்க்கப்பட்டுள்ளது:

*அவுஸ்திரேலியாவில் நான் தங்கியிருக்கும் காலத்தில் இந்தப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அவுஸ்திரேலிய விழுமியங்களுக்கு நான் மரியாதையளிப்பேன் மற்றும் அவுஸ்திரேலியச் சட்டங்களை நான் கடைப்பிடிப்பேன்.*

இணையதள விண்ணப்பங்களுக்கு, இந்த வாக்குமூலம் சற்று மாறுபட்டுள்ளது:

*அவுஸ்திரேலியாவில் நான் தங்கியிருக்கும் காலத்தில் இந்த விண்ணப்பத்தின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அவுஸ்திரேலிய விழுமியங்களுக்கு நான் மரியாதையளிப்பேன் மற்றும் அவுஸ்திரேலியச் சட்டங்களை நான் கடைப்பிடிப்பேன்.*

18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய சார்ந்திருப்பவர்களைக் கொண்டுள்ள இணையதள விண்ணப்பங்களுக்கு, அறிக்கையில் கூடுதல் பத்தி ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது:

*இந்த விண்ணப்பத்தில் இடம் பெற்றுள்ள 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய இதர நபர்கள் அனைவரும், தாங்களும் இந்த நிபந்தனைக்கு ஒப்புக்கொள்வதாக என்னிடம் தெரிவித்துள்ளனர்.*

விண்ணப்பதாரர்கள் தங்கள் சார்பாகவும், சார்ந்திருப்போர் (பொருந்துமானால்) சார்பாகவும் விழுமிய வாக்குமூல உறுதிமொழிக்கு ‘ஆம்’ அல்லது ‘இல்லை’ என்பதைக் குறிப்பிடும் பொத்தானைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

# அவுஸ்திரேலிய விழுமியங்கள் மற்றும் ஒழுக்க நெறிகள்

குறிப்பிட்ட தலைப்புகள் குறித்த மேலதிகத் தகவல்களை அறிந்துகொள்ள, தொடர்புடைய இணையதளங்கள் மற்றும் பட்டியலிடப்பட்டுள்ள இன்ன பிற மூலவளங்களுக்குச் செல்லவும்.

இந்த பெருமானங்களும் அறிக்கைகளும் பல இதர நாடுகளால் ஓரளவுக்கு பகிர்ந்துகொள்ளப்படும் அதே சமயம், இவை அவுஸ்திரேலியாவின் தனித்துவமான அமைப்பில் ஏற்கப்பட்டுள்ளன, வடிவமைக்கப்பட்டுள்ளன மற்றும் உலகம் முழுவதும் உள்ள லட்சக்கணக்கான மக்கள் அவுஸ்திரேலியாவில் குடியேறுவதன் வாயிலாக நவீனமயமாக்கப்பட்டுள்ளன. அவை வெவ்வேறு நபர்களால் வெவ்வேறு விதமாக வெளிப்படுத்தப்படலாம் என்றாலும் கூட, அவற்றின் பொருள் ஒன்றுதான்..

அவுஸ்திரேலியாவில் முதல் வாசிகள் பூர்விக மற்றும் டாரஸ் ஸ்ட்ரெயிட் தீவு மக்களே ஆவர், அவர்களுடைய தனித்துவமான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் உலகிலேயே மிகவும் பழமையானதாகும். முதலில் குடியேறிய அயல்நாட்டவர்களில் பெரும்பாலானோர் பிரிட்டன் மற்றும் அயர்லாந்து நாட்டவராவர். இந்த ஆங்கிலோ-செல்டிக் பாரம்பரியம் அவுஸ்திரேலியாவின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் அரசியல் பாரம்பரியத்தில் குறிப்பிடத்தக்க மற்றும் தொடர்ச்சியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதைத் தொடர்ந்து வந்த பல குடியேற்ற அலைகள் ஆப்பிரிக்கா, ஆசியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகளிலிருந்து மக்களைக் கவர்ந்திழுத்துள்ளன. அவர்கள் அனைவரும் அவுஸ்திரேலியாவுக்கும் அதன் வாழ்க்கை முறைக்கும் தங்களது தனித்துவமிக்க பங்களிப்பினை வழங்கியுள்ளனர்.

பகிரப்படும் விழுமியங்கள் மற்றும் ஒழுக்க நெறிகளின் இந்த அறிக்கை அனைவரையும் ஒரே மாதிரியான, ஒரே விதமான நம்பிக்கைகளைக் கொண்டவர்களாக மாற்றுவதை வலியுறுத்தவில்லை. நிலையான ஆனால் அதே சமயம் செயலாற்றும் திறமை கொண்ட; ஒத்திசைவான ஆனால் பன்முகத்தன்மை கொண்ட ஒரு சமுதாயத்தை உருவாக்க உதவியுள்ள அடிப்படை விழுமியங்களை புதிதாகக் குடியேறியவர்கள் புரிந்துகொள்ள உதவுவது இதன் நோக்கம் ஆகும்.

அவுஸ்திரேலியாவில், மக்கள் பல சுதந்திரங்களைப் பெற்றுள்ளனர். இருப்பினும், இந்த சுதந்திரங்களை அனுபவிக்கும் வேளையில், அனைவரும் அவுஸ்திரேலியச் சட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். இவை ஒழுங்கான, தடங்கலற்ற மற்றும் பாதுகாப்பான சமூகத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

## அடிப்படைச் சுதந்திரங்கள்

அவுஸ்திரேலியர்கள் அனைவருக்கும் எண்ணற்ற அடிப்படைச் சுதந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன (சட்டங்களுக்கு உட்பட்டு), சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் பேசுதல், சங்கங்களில் சேர்தல், கூட்டங்கள் நடத்துதல், தங்களுக்கு விருப்பமான மத வழிபாட்டைக் கடைப்பிடித்தல் மற்றும் எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி அவுஸ்திரேலியா முழுவதும் பயணம் செய்தல் ஆகியவை இவற்றில் உள்ளடங்கும்.

## தனிப்பட்டவர்களின் சமத்துவம், கண்ணியம் மற்றும் சுதந்திரத்திற்கான மதிப்பு

அவுஸ்திரேலியர்கள் அனைவரும் சுதந்திரமானவர்கள் மற்றும் சமமானவர்கள், மற்றும் அவர்கள் ஒருவரோடொருவர் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். நமது சமுதாயத்தில் மோதல் ஏற்படுத்தும் நோக்கத்திற்காக வன்முறை,

அடக்குமுறை அல்லது அவமானம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதை அவுஸ்திரேலியர்கள் நிராகரிக்கின்றனர். .

'இனப் பாகுபாட்டுச் சட்டம் *1975'*, 'பாலினப் பாகுபாட்டுச் சட்டம் *1984'*, 'உடல் ஊன பாகுபாட்டுச் சட்டம் *1992'* மற்றும் 'வயது பாகுபாட்டுச் சட்டம் *2004'* ஆகியவற்றின் கீழ் பொது வாழ்க்கையின் பல பகுதிகளில் சாதி, பாலினம், ஊனம் மற்றும் வயது ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு ஏற்படுத்தப்படுவதை பொதுநல அரசுச் சட்டங்கள் தடை செய்கின்றன. 'அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையம்' இந்தச் சட்டங்களின் கீழ் வரும் புகார்களைக் கையாளுவதற்குப் பொறுப்புடையதாகும்.

பார்க்கவும்: 'அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையம்'

## பேச்சு சுதந்திரம்

அனைத்து அவுஸ்திரேலியர்களும் அவுஸ்திரேலிய அரசாங்கங்களைப் பற்றி, அல்லது வேறு ஏதாவது பொருள அல்லது சமூகப் பிரச்சனை பற்றி அவை பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தாத வரை, பொய்யான குற்றச்சாட்டுகளை ஏற்படுத்தாத வரை அல்லது மற்றவர்களது பேச்சுச் சுதந்திரத்தினைத் தடை செய்யாத வரை, சட்டத்தின் எல்லைகளுக்குட்பட்டு தாங்கள் நினைப்பதைச் சொல்வதற்கு அல்லது எழுதுவதற்கான சுதந்திரத்தினைப் பெற்றுள்ளனர்.

இதே சட்டம் அவுஸ்திரேலிய செய்தித்தாள்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி மற்றும் இன்ன பிற வகையான ஊடகங்களுக்கும் பொருந்தும். அவுஸ்திரேலியர்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும் சட்டங்களை மாற்றுவதற்குப் பிரச்சாரம் செய்வதற்குமான சுதந்திரத்தினைப் பெற்றுள்ளனர்.

பேச்சு சுதந்திரம் தங்களுக்கு கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் யோசனைகளைப் பற்றி விவாதிப்பதற்கும் மக்களுக்கு அனுமதியளிக்கிறது. தவறான தகவல்கள் அல்லது பொய்யான கருத்துக்களிலிருந்து தனிநபர்களின் நற்பெயரைப் பாதுகாப்பதற்கான சட்டங்களும் உள்ளன. கலாச்சாரம், இனம் அல்லது பின்னணி காரணமாக மற்றவர்களுக்கு எதிராக பகைமையைத் தூண்டுவதற்கு எதிரான சட்டங்களும் உள்ளன.

## மதம் மற்றும் மதச்சார்பற்ற அரசுக்கான சுதந்திரம்

அவுஸ்திரேலியர்கள் அனைவரும் தாங்கள் விரும்பும் எந்த ஒரு மதத்தையும், அதனைப் பின்பற்றுவதனால் அவுஸ்திரேலியச் சட்டங்களுக்கு எந்த முரண்பாடும் ஏற்படாத வரை, பின்பற்றுவதற்கான சுதந்திரம் பெற்றுள்ளனர். மேலும், எந்த ஒரு மதத்தையும் பின்பற்றாமல் இருப்பதற்கும் அவுஸ்திரேலியர்களுக்கு உரிமை உள்ளது. மத சகிப்புத்தன்மையற்ற நிலை அவுஸ்திரேலிய சமூகத்தில் ஏற்கப்படுவதில்லை.

அவுஸ்திரேலியா ஒரு மதச் சார்பற்ற அரசாங்கத்தைக் கொண்டுள்ளது – அது எந்த ஒரு அதிகாரப்பூர்வ அல்லது தேசிய மதத்தையும் பின்பற்றுவதில்லை. அரசாங்கம் குடிமக்களின் மதத்தைக் கருத்தில் கொள்ளாது அனைவரையும் சமமாகப் நடத்துகிறது.

மதச் சட்டங்கள் அவுஸ்திரேலியாவில் சட்ட ரீதியான அந்தஸ்து எதையும் பெற்றிருக்கவில்லை மற்றும் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் மட்டுமே செல்லுபடியாகும், உதாரணமாக, விவாகரத்து விஷயம். பலதார மணம் (ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களை திருமணம் செய்திருப்பது) போன்ற சில மத அல்லது கலாச்சார நடைமுறைகள் அவுஸ்திரேலிய சட்டத்துக்கு எதிரானவை ஆகும்.

## ஒன்று கூடும் சுதந்திரம்

சட்டத்திற்குட்பட்டு, போராட்டம் அமைதியாகவும், மக்களுக்கோ அல்லது சொத்துக்கோ எந்தவித சேதமும் ஏற்படுத்தாமலும் இருக்கும் வரை ஒன்றுகூடி அரசாங்கத்திற்கு அல்லது வேறு ஏதாவது அமைப்பிற்கு எதிராகப் போராடுவதற்கான சுதந்திரத்தை அவுஸ்திரேலியர்கள் பெற்றுள்ளனர்.

ஒன்று கூடும் சுதந்திரம் என்பது சட்ட ரீதியானதாக இருக்கும் பட்சத்தில் ஏதாவது ஒரு அமைப்பில் சேர்வதற்கான அல்லது சேராமலிருப்பதற்கான சுதந்திரத்தை உள்ளடக்கியுள்ளது. அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சமூகக் குழுக்கள் ஆகியவை அத்தகைய அமைப்புகள் அல்லது குழுக்களில் உள்ளடங்கும்.

## நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் சட்ட மேன்மைக்கான ஆதரவு

அவுஸ்திரேலியா நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பின்பற்றுகிறது, அதாவது நாடு எவ்வாறு ஆளப்படுகிறது என்பதிலும் மற்றும் அவுஸ்திரேலிய சமூகம் எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது என்பதிலும் அவுஸ்திரேலிய குடிமக்கள் பங்கேற்கிறார்கள். அரசாங்கங்கள் அனைத்து அவுஸ்திரேலியர்களுக்கும் பதிலளிக்கும் பொறுப்பைப் பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றங்கள் என்பவை அவுஸ்திரேலியாவில் சட்டங்களை ஏற்படுத்தும் திறன் கொண்ட அல்லது சட்டங்களை ஏற்படுத்தும் அதிகாரிகளை நியமிக்கும் திறன் கொண்ட அமைப்புகள் மட்டுமே ஆகும்.

அவுஸ்திரேலியாவில் உள்ள அனைவரும் அரசாங்கங்களால் உருவாக்கப்பட்ட சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவுஸ்திரேலியர்கள் அனைவரும் சட்டத்தின் ஆட்சி மூலம் சமமாக பாதுகாக்கப்படுகின்றனர். அதாவது, அரசியல்வாதிகள் அல்லது காவல்துறையினர் போன்ற ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் சட்டத்திலிருந்து அல்லது 'சட்டத்தை மேற்பட்டவர்கள்' என்ற விதிவிலக்கு வழங்கப்படுவதில்லை.

## சட்டத்தின் கீழான சமத்துவம்

அனைத்து அவுஸ்திரேலியர்களும் சட்டத்தின் கீழ் சமமானவர்கள். அதாவது எவரையும் அவருடைய சாதி, இனம் அல்லது வம்சாவளி நாட்டைப் பொறுத்து; வயது, பாலினம், திருமண நிலை அல்லது இயலாமையைப் பொறுத்து; அல்லது தனது அரசியல் அல்லது மத நம்பிக்கைகளைப் பொறுத்து வேறொருவரிடமிருந்து மாறுபட்ட விதத்தில் நடத்தப்படக் கூடாது. அரசாங்க முகமைகள் மற்றும் சுதந்திர நீதிமன்றங்கள் ஆகியவை அனைவரையும் பாகுபாடின்றி நடத்த வேண்டும்.

சமமாக நடத்துதல் என்றால் ஒருவர் வேலை ஒன்றைப் பெறுவது அல்லது பதவி உயர்வு பெறுவதென்பது ஒருவருடைய திறன்கள், தகுதி மற்றும் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் இருக்க வேண்டும், அவருடைய கலாச்சாரப் பின்னணி அல்லது அரசியல் நம்பிக்கைகளின் அடிப்படையில் இருக்கக் கூடாது என்பதாகும். மேலும், மக்களுக்கு அவர்களுடைய இனம், நிறம், மதம், பாலினம் அல்லது திருமண நிலை ஆகியவற்றின் காரணமாக ஒரு கடையில் அல்லது உணவகத்தில் அல்லது இதர சேவையகத்தில் வழங்கப்படும் சேவை மறுக்கப்படக் கூடாது என்பதைக் குறிக்கிறது.

## ஆடவர் - மகளிர் சமத்துவம்

அவுஸ்திரேலியாவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்படுகின்றன. வேலைகளிலும் தொழில்களிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்படுகிறது. ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாருமே இராணுவத்தில் பணிபுரிய முடியும் மற்றும் இருவருமே அரசுப் பதவிகளையும் வகிக்க முடியும்.

## சம வாய்ப்பு மற்றும் சமத்துவ உணர்வு

அவுஸ்திரேலியர்கள் பெரும்பாலும் 'நியாயமான போக்கு' என்றழைக்கப்படுகின்ற சம வாய்ப்பை மதிக்கிறார்கள். அதாவது, ஒருவர் தனது வாழ்க்கையில் பெறும் சாதனையை அவரது பிறப்பு அல்லது பாரபட்சத்தின் காரணமாக அவர் பெறுவதை விட, அவரது திறமைகள், வேலை மற்றும் முயற்சியின் காரணமாகப் பெற்றிருக்க வேண்டும் என்பதை இது குறிக்கிறது.

அவுஸ்திரேலியர்கள் பரஸ்பர மரியாதை, சகிப்புத்தன்மை மற்றும் பரிவு ஆகியவற்றை மதிக்கும் சமத்துவ உணர்வைப் பெற்றுள்ளனர். அனைவரும் சமம் என்பதையோ அல்லது ஒவ்வொருவரும் சமமான பணபலம் அல்லது சொத்தைப் பெற்றுள்ளனர் என்பதையோ இது குறிக்காது. அவுஸ்திரேலிய சமுதாயத்தில் சம்பிரதாய இனப் பாகுபாடுகள் எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்துவது இதன் நோக்கம் ஆகும்.

## அமைதி

அவுஸ்திரேலியர்கள் தங்களுடைய அமைதியான சமுதாயம் குறித்து பெருமிதம் கொள்கிறார்கள். விவாதம், அமைதியான முறையில் இணங்க வைத்தல் மற்றும் ஜனநாயக நடைமுறை ஆகியவற்றின் மூலம் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என அவர்கள் நம்புகிறார்கள். மக்களின் மனங்களையோ அல்லது சட்டத்தையோ மாற்றுவதற்கு வன்முறை என்ற வழியை அவர்கள் நிராகரிக்கின்றனர்..

இந்த விழுமியங்களுடன் சேர்த்து, அவுஸ்திரேலியர்கள் பொது நல முயற்சியிலும் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள் மற்றும் உதவி தேவைப்படுவோரிடம் அவர்கள் இரக்க உணர்வுடன் நடந்துகொள்கின்றனர். அவுஸ்திரேலியாவில் வலுவான சமுதாய உணர்வு இருக்கிறது. அவுஸ்திரேலியர்கள் தாங்கள் வசிக்கும் சமுதாயத்தை உயர்த்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் முயற்சிப்பர்.

அவுஸ்திரேலியர்கள் பலர் சமுதாயத்திற்குத் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் பங்களித்துள்ளனர். சுற்றுச்சூழலைக் கவனித்துக்கொள்வது, பொது நலத்திற்கான முயற்சியில் தேவையான நேரத்தில் கைகொடுப்பது மற்றும் ஒத்துழைப்புடன் செயல்படுவது ஆகியவற்றின் வாயிலாக இதை அவர்கள் நிரூபிக்கக்கூடும்..

அவுஸ்திரேலியாவில் ‘தோழமை’ (‘mateship’) என்ற வலுவான பாரம்பரியம் உள்ளது, இந்த உணர்வுள்ளர்கள்  மற்றவர்களுக்கு, குறிப்பாக சிரமத்தில் இருப்பவர்களுக்கு, தாமாக முன்வந்து உதவுவார்கள். துணைவர் என்பவர் பொதுவாக ஒரு நண்பர் ஆவார், ஆனால் அவர் கணவர்/மனைவியாக, கூட்டாளராக, சகோதரராக, சகோதரியாக, மகளாக அல்லது மகனாகவும் இருக்கலாம். முற்றிலும் அறிமுகமில்லாத நபர் கூட ஒரு தோழனாக இருக்க முடியும். சமுதாயச் சேவை மற்றும் தன்னார்வத் தொண்டு ஆகியவற்றிற்கான வலுவானதொரு பாரம்பரியமும் அங்கு நிலவுகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட விழுமியங்கள் அவுஸ்திரேலியர்களால் பல ஆண்டுகளாக முன்னெடுத்து வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டுள்ளன. அவை பல இனக் குழுக்கள் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியங்களிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு வரும் இலட்சக் கணக்கான மக்களை வரவேற்பதற்கும், அவர்களைவெற்றிகரமாக ஒருங்கிணைப்பதற்கும் உதவியுள்ளன.

அவுஸ்திரேலியாவின் கலாச்சார வேறுபாடு என்பது வலுவான இயங்கு திறன் கொண்டதொரு சமுதாயத்தை உருவாக்கும் வல்லமை கொண்டதாகும். அவுஸ்திரேலியச் சட்டங்களின்படி, அவுஸ்திரேலியர்கள் அனைவரும் தங்களுடைய கலாச்சாரம் மற்றும் நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதற்கான உரிமை பெற்றுள்ளனர்.

ஆனால் அதே சமயம், அவுஸ்திரேலியர்கள் அனைவரும் அவுஸ்திரேலியாவிற்கு அதன் சட்டங்கள், விழுமியங்கள் மற்றும் மக்கள் ஆகியவற்றுக்கு மேலோங்கிய அர்ப்பணிப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## பகிரப்படும் விழுமியங்கள்

அவுஸ்திரேலியாவின் குடியேற்றவாசிகள் பல்வேறு கலாச்சார மற்றும் மதப் பின்னணியிலிருந்து வந்திருந்தாலும் கூட, அவர்கள் அவுஸ்திரேலியாவில் வெற்றிகரமாக குடியமர்ந்து பரந்த சமுதாயத்திற்குள் ஒருங்கிணைந்து வசிக்கின்றனர். பதிலுக்கு அவர்கள் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார ரீதியாக செய்துள்ள பங்களிப்புகளின் மூலம் அவுஸ்திரேலியா செழிப்படைந்துள்ளது.

இன்றைய அவுஸ்திரேலிய சமுதாயத்தில் வசிப்பவர்களின் கலாச்சார பன்முகத்தன்மை மட்டுமல்லாது அவுஸ்திரேலியாவின் மேலோங்கிய மற்றும் ஒருங்கிணைக்கும் அர்ப்பணிப்பின்

வாயிலாக அவர்கள் எந்த அளவுக்கு ஒற்றுமையுடன் செயல்படுகின்றனர் என்பதும் அங்கு நிலவும் முக்கியமான அம்சமாக விளங்குகிறது. அவுஸ்திரேலியர்கள் தங்களுடைய தனிநபர் வேறுபாடுகளைக் கைவிட்டு சுற்றுப்புறத்திலுள்ள அனைவருடனும் ஒன்றிணைந்து வாழ்கின்றனர்.

அவுஸ்திரேலியச் சட்டங்களின்படி, அவுஸ்திரேலியர்கள் அனைவரும் தங்களுடைய கலாச்சாரம் மற்றும் நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதற்கான, மற்றும் அவுஸ்திரேலியாவின் தேசிய வாழ்க்கையில் சுதந்திரமாகப் பங்கேற்பதற்கான உரிமையைப் பெற்றுள்ளனர். ஆனால் அதே சமயம், அவுஸ்திரேலியர்கள் அனைவரும் அறிமுகப் பகுதியில் குறிப்பிட்டவாறு அவுஸ்திரேலியாவின் வாழ்க்கை முறைக்கு தாங்குதலாக உள்ள கொள்கைகளையும் பகிரப்படும் விழுமியங்களையும் நிலை நிறுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இன்றைய அவுஸ்திரேலிய சமுதாயம்

இன்றைய அவுஸ்திரேலிய சமுதாயத்தின் வரையறுக்கும் அம்சங்களில் ஒன்று அவுஸ்திரேலிய சமுதாயத்தில் வசிப்பவர்களின் கலாச்சார பன்முகத்தன்மையும், அவுஸ்திரேலியாவின் மேலோங்கிய மற்றும் ஒருங்கிணைக்கும் அர்ப்பணிப்பின் வாயிலாக அவர்கள் எந்த அளவுக்கு ஒற்றுமையுடன் செயல்படுகின்றனர் என்பதும் அங்கு நிலவும் முக்கியமான அம்சங்களில் ஒன்றாக விளங்குகிறது.

மற்றொரு முக்கிய அம்சம் அவுஸ்திரேலிய சமுதாயத்தின் சமத்துவ உணர்வு ஆகும். அனைவரும் ஒரே மாதிரியானோர் என்பதையோ அல்லது ஒவ்வொருவரும் சமமான பணபலம் அல்லது சொத்தைப் பெற்றுள்ளனர் என்பதையோ இது குறிக்காது. கடின உழைப்பு மற்றும் ஈடுபாட்டின் மூலம், உயர்நிலைத் தொடர்புகள் அல்லது செல்வாக்குப் பெற்ற ஆதரவாளர்களின் துணை இல்லாதவர்களும் வெற்றி பெற முடியும் என்பதை இது குறிக்கிறது.

அவுஸ்திரேலியச் சட்டங்களின்படி, அவுஸ்திரேலியர்கள் அனைவரும் தங்களுடைய கலாச்சாரம் மற்றும் நம்பிக்கைகளை வெளிப்படுத்த முடியும் மற்றும் அவுஸ்திரேலியாவின் தேசிய வாழ்க்கையில் சுதந்திரமாகப் பங்கேற்க முடியும். எந்த ஒரு நபருக்கும் அவர்கள் பிறந்த நாடு, கலாச்சாரப் பாரம்பரியம், மொழி, பாலினம் அல்லது மத நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் இடையூறு ஏற்பட்டுவிடக் கூடாது என்ற நம்பிக்கையை அவுஸ்திரேலியா உறுதியாகக் கடைப்பிடிக்கின்றது.

நிலையான, அமைதியான மற்றும் வளமான சமுதாயத்தை நிலைநிறுத்துவதற்காக, அனைத்து நிலைகளிலும் உள்ள அவுஸ்திரேலியர்கள் அவுஸ்திரேலிய சமுதாயத்தினது அடிப்படையாக உள்ள பகிரப்படும் ஒழுக்க நெறிகளையும், விழுமியங்களையும் கடைப்பிடிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## சட்டங்கள் மற்றும் சமூகப் பழக்கவழக்கங்கள்

அவுஸ்திரேலியாவில் நிலவும் சமுதாய நடத்தையானது முறையான சட்டங்கள் மற்றும் முறைசாரா சமூகப் பழக்கவழக்கங்கள் இரண்டின் மூலமும் கட்டுப்படுத்தப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் உள்ள மக்கள் அனைவரும் நாட்டின் சட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும், இல்லையெனில் குற்றவியல் அல்லது குடிமையியல் வழக்குகளை எதிர்கொள்வதற்கான சாத்தியம் நேரிடும். அவுஸ்திரேலியாவின் சமூகப் பழக்கவழக்கங்கள், பழக்கங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவை பொதுவாக சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்தப்படவில்லை என்றாலும் கூட மக்கள் பொதுவாக அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியச் சட்டங்கள் அவுஸ்திரேலிய காமன்வெல்த், மாநில மற்றும் பிரதேச நாடாளுமன்றங்களால் ஏற்படுத்தப்படுகின்றன. சமுதாயத்தில் அமைதியும் ஒழுங்கும் நிலவுவதைப் பராமரிப்பதும், சட்டத்தை மீறுவதாக நம்பப்படுபவர்களை சட்ட நீதிமன்றங்களின் முன்னால் நிறுத்துவதும் காவல்துறையின் வேலை ஆகும். ஏதாவது பிரச்சனை எழும் பட்சத்தில் உள்ளூர் சமுதாயங்களிலும் சுற்றுப்புறங்களிலும் வசிப்பவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்வர் மற்றும் அசாதாரணமான அல்லது சந்தேகத்துக்கிடமான எந்த ஒரு விஷயத்தையும் காவல்துறையிடம் தெரிவிப்பர்.

‘அவுஸ்திரேலிய ஃபெடரல் போலிஸ்’ எனப்படும் தேசிய காவல் படையை அவுஸ்திரேலியா கொண்டுள்ளது. இது போதை மருந்து கடத்தல், சட்டத்துக்குப் புறம்பான குடியேற்றம், தேசியப் பாதுகாப்பிற்கு எதிரான குற்றங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு எதிரான குற்றங்கள் ஆகியவை உட்பட ஃபெடரல் சட்டங்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கின்றது.
அவுஸ்திரேலியாவிலுள்ள அனைத்து மாநிலங்களும், வட எல்லைப் பகுதியியும் தங்களுக்கென பிரத்யேகமான காவல் துறைகளைக் கொண்டுள்ளன, அவை மாநில அல்லது எல்லைப் பகுதிச் சட்டங்கள் மூலம் இக் குற்றங்களைக் கையாளுகின்றன. அவுஸ்திரேலியாவின் தலைநகர எல்லைப் பகுதியில் உள்ள காவல்துறை ‘அவுஸ்திரேலிய ஃபெரடல் காவல்துறை’ மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

காவல்துறை அதிகாரிகள் மக்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் சாட்சியத்தைச் சமர்ப்பித்தாலும் கூட, மக்கள் குற்றம் புரிந்தார்களா இல்லையா என்பதற்கான இறுதி முடிவை அவர்கள் எடுப்பதில்லை. இது நீதிமன்றங்களால் முடிவு செய்யப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் காவல்துறைக்கும் சமுதாயத்துக்கும் இடையே நல்ல உறவுமுறை நிலவுகிறது. நீங்கள் குற்றங்களை காவல்துறையிடம் புகார் செய்யலாம் மற்றும் அவர்களிடமிருந்து உதவி கோரலாம். காவல்துறையினர் உங்களைக் கேள்வி கேட்டால், அமைதியாகவும் பண்பாகவும் ஒத்துழைப்புக் கொடுங்கள்.

## குணவியல்புத் தேவைகள்

விசா வைத்திருப்பவர்கள் அனைவரும் அவுஸ்திரேலியச் சட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும், தங்களுடைய விசாவின் குணவியல்புத் தேவைகளை தொடர்ந்து பூர்த்தி செய்துகொண்டிருக்க வேண்டும் எனவும் அவுஸ்திரேலிய சமுதாயம் எதிர்பார்க்கிறது. குற்றவியல் தண்டனை புரிந்துள்ள ஒருவர், மற்றும் சட்டத்தினால் தடைசெய்யப்பட்ட மோட்டார்சைக்கிள் குழுக்கள் அல்லது பயங்கரவாதக் குழுக்கள் போன்றவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ள ஒருவர், அல்லது அவுஸ்திரேலிய சமுதாயத்திற்கோ அல்லது அவுஸ்திரேலிய சமுதாயத்தில் உள்ள ஒரு தனிநபருக்கோ தீங்கு ஏற்படுத்துவதாக நம்பப்படும் ஒருவர் ஆகியோரின் விசாக்கள் இரத்து செய்யப்படலாம். உடல்நலம், பாதுகாப்பு அல்லது அவுஸ்திரேலிய சமுதாயத்தின் ஒழுங்கு ஆகியவற்றுக்கு ஆபத்து விளைவிக்கின்ற அல்லது ஆபத்து விளைவிக்கலாம் என நம்பப்படுகிற ஒருவருடைய விசா இரத்து செய்யப்படலாம்.

தனது விசா இரத்து செய்யப்பட்ட ஒருவர் தடுப்புக் காவலில் வைக்கப்படலாம் மற்றும் அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியேற்றப்படலாம்.  பல தருணங்களில் அவர்கள் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பி வர முடியாமல் நிரந்தரமாக வெளியேற்றவும்படுவார்கள்.

## அவுஸ்திரேலியப் பணியிட உரிமைகள்

ஏற்பாதரவளிக்கப்பட்ட மற்றும் ஏற்பாதரவளிக்கப்படாத விசா வைத்திருப்பவர்கள் உட்பட, அவுஸ்திரேலியாவில் பணிபுரிபவர்கள் பணிபுரியுமிடத்தில் உரிமைகளையும் பாதுகாப்புகளையும் பெற்றுள்ளனர். இவற்றை ஒப்பந்தங்கள் மூலம் பறிக்க இயலாது.

குறைந்தபட்ச சம்பள விகிதங்கள் மற்றும் பணியிட நிபந்தனைகள் ஆகியவை அவுஸ்திரேலியச் சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன.

விசா வைத்திருப்போர் மற்றும் புலம்பெயர்ந்தோருக்கான ‘அவுஸ்திரேலியப் பணியிட நியாய குறைகேட்பு அதிகாரி’யின் இணையப்பக்கம் வேலையைத் தொடங்குவதற்கு முன்னர் நீங்கள் எதைத் தெரிந்துகொள்ள வேண்டும், சம்பள விகிதங்கள், விடுப்பு ஏற்பாடுகள் மற்றும் பணியாளர் உரிமைகள் ஆகியவை பற்றிய தகவல்களை வழங்குகிறது.

பார்க்கவும்: ‘விசா வைத்திருப்போர் மற்றும் புலம்பெயர்ந்தோர்’ (Visa holders & migrants)

‘அவுஸ்திரேலியப் பணியிட நியாய குறைகேட்பு அதிகாரி’ அவர்களால் உங்களுக்குக் கூடுதல் தகவல்களை வழங்க முடியும் மற்றும் பணியிட உரிமைகள் மற்றும் கடமைப் பொறுப்புகளைப் பற்றித் தெரிவிக்க முடியும், மற்றும் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பணியிடத் தகவல்களை அளிக்க முடியும்.

பார்க்கவும்: ‘பணியிட நியாய குறைகேட்பு அதிகாரி’

# மேலதிகத் தகவல்கள்

## குடியமரல் குறித்த விஷயங்கள்:

‘சமூக சேவைகள் திணைக்களAlready’(Department of Social Services (DSS))த்தின் இணையதளத்தில் தகவல்கள் உள்ளன.

‘அவுஸ்திரேலியாவில் வாழ்க்கையைத் தொடங்குதல்’ எனும் சிற்றேடு ‘சமூக சேவைகள் திணைக்கள’த்தின் இணையதளத்திலும் கிடைக்கிறது (ஆங்கிலம் மற்றும் 37 இதர பல மொழிகளில் கிடைக்கிறது)

பெரும்பாலான தற்காலிக விசா விண்ணப்பதாரர்களுக்கு, அவர்களுடைய விண்ணப்பப் படிவத்தின் பொது உறுதிமொழிப் பிரிவில் விழுமிய வாக்குமூலம் சேர்க்கப்பட்டுள்ளது.

மனிதாபிமான விசாவுக்கு விண்ணப்பித்துக்கொண்டு தற்போது அவுஸ்திரேலியாவுக்கு வெளியில் வசிப்பவர்கள் நேர்காணலின் போது விழுமிய வாக்குமூலத்தில் கையொப்பமிட வேண்டும். இந்த விண்ணப்பதாரர்கள் மேலேயுள்ள இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களைப் வாசித்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட மாட்டர், ஏனெனில் இந்த உள்ளடக்கங்கள் நேர்காணலின்போது அவர்களுக்கு விளக்கப்படும். இந்த வேறுபட்ட செயல்முறை அவுஸ்திரேலியாவுக்கு வெளியில் வசிக்கும் மனிதாபிமான விசா விண்ணப்பதாரர்கள் பெரும்பாலான தருணங்களில் எதிர்கொள்ளும் சிரமமான சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்கிறது.

அவுஸ்திரேலியாவுக்கு வெளியில் வசிப்பவர்களுக்கான மனிதாபிமான திட்டத்தின் கீழ் உங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டால், அவுஸ்திரேலியாவிற்குப் புறப்படுவதற்கு முன்னர் ‘அவுஸ்திரேலிய கலாச்சார அறிமுகத் திட்டம்’ (Australian Cultural Orientation Programme (AUSCO)) ஒன்றில் பங்கேற்குமாறு நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள். இந்தத் திட்டம் அவுஸ்திரேலியாவுக்குச் சென்று அங்கு தங்குவது பற்றிய தகவல்களை வழங்குகிறது, மேலும் அது ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் மத்தியக் கிழக்கு நாடுகளில் பல்வேறு இடங்களில் நடத்தப்படுகிறது.

அவுஸ்திரேலிய விழுமிய வாக்குமூலத்திற்கான ஒப்புதல் அளிக்கவேண்டிய தேவை இல்லாத சிறிய விசா குழு ஒன்றும் உள்ளது. இந்தக் குழு பின்வருபவை மட்டுமன்றி ஏனையவற்றையும் உள்ளடக்கியுள்ளது:

- வருனர் விசாக்கள்
- ‘திரும்பும் வதிவாளர் விசா’(Resisent Return visa)வின் கீழுள்ள அல்லது இந்த விசாவிற்காக விண்ணப்பித்திருப்பவர்களை உள்ளடக்கிய ‘சிறப்புப் பிரிவு விசா’(Special Category visa)வின் கீழ் அவுஸ்திரேலியவிற்குள் நுழையும் நியூ ஸீலண்ட் பிரசைகள்.